Nestlé Good food, Good life

# Press Release

Colombo, May 3, 2023

**நெஸ்லே லங்கா நிறுவனம் இலங்கைக்கான தனது பங்களிப்பை தொடர்ச்சியாக மேம்படுத்தும்** - செயல்திறன்களை இயக்குமுகமாக கொழும்புப் பங்குச் சந்தையின் பட்டியலிலிருந்து நீங்குவதற்கான பிரேரணை

115 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் இயங்கி வரும் நெஸ்லே லங்காவின் ஆழமான வேரூன்றிய பிணைப்பும், நாடு மற்றும் அதன் மக்கள் மீதான அர்ப்பணிப்பும் வலுவானதாகத் தொடரும். தனது இப்பயணத்தில் "நல்லுணவு நல்வாழ்வு " நிறுவனம், குடும்பங்கள், சமூகங்கள், மற்றும் பூகோளத்திற்கும் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துமுகமாக தனது பங்காளர்களுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றியது. நிறுவனம் 2022ம் ஆண்டில், குருநாகலில் இயங்கிவரும் அதன் தொழிற்சாலையில் திறன் விரிவாக்கம், 2023ம் ஆண்டில் உயிரி கொதிகலன் திட்டம் உட்பட, தன முதலீடுகளை மேம்படுத்தியுள்ளது.

நெஸ்லே லங்கா ஆயிரக்கணக்கான இலங்கைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்குப் பங்களிக்கிறது. இதில் 24,000 உள்நாட்டுப் பாற்பண்ணையாளர்கள், தெங்குப் பயிர்ச்செய்கையாளர்கள், வீட்டுவளர்ப்பாளர்கள், மற்றும் தொழில்முறை வளர்ச்சி, சர்வதேச பயிற்சியுடன் வளர்ச்சி வெளிப்பாடு ஆகியவற்றிற்கான வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளும் நிறுவனத்தில் நேரடியாகத் தொழில் புரியும் 800க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

நாட்டிற்கு தனது பங்களிப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் மிகவும் திறமையான செயல்பாட்டைக் கொண்டிருப்பதற்கான வழிகளை நிறுவனம் தீவிரமாகத் தேடி வருகிறது. ஆகையால் தேவையான ஒப்புதல்கள், அனுமதிகளுக்கமைய, கொழும்புப் பங்கு சந்தையின் பட்டியலிலிருந்து நீங்குவதற்கான பிரேரணை, பணிப்பளார் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சட்டப்பூர்வ அறிக்கையிடல் மற்றும் இணக்கத் தேவைகளை நிலைநிறுத்தும் அதே வேளையில், முக்கிய வணிக நடவடிக்கைகளில் அதன் கவனத்தை வலுப்படுத்தவும் இந்த நீக்கம் நிறுவனத்திற்கு உதவும்.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப்ப பணிப்பாளர், திருவாளர், பெர்ன்ஹார்ட் ஸ்டெபான் தனது கருத்தில் "எங்களின்

மதிப்புமிக்க பங்குதாரர்கள் எங்கள் மீது தொடர்ந்து நம்பிக்கை வைப்பதற்கும், பல ஆண்டுகளாக தொடர்ந்து ஆதரவு அளித்ததற்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். இந்த பிரேரணை பங்குதாரர்களின் நலன் கருதிதாயக நாங்கள் உறுதியாக நம்பும் அதேவேளை, கவர்ச்சிகரமானதும் நியாயமானதுமான கட்டணத் தொகை யுடனானதுமாகும் என்று உறுதியளிக்கிறோம். கடந்த காலங்களைப் போலவே, நாங்கள் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றி உயர் தரமான தயாரிப்புகளை இலங்கை நுகர்வோருக்குக் கொண்டு வரும் அதேவேளை பூகோளத்திற்கும் நல்லது செய்வோம். நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் நாங்கள் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தி செயல்திறனைத் தொடர்ந்து இயக்குவோம்" எனக் குறிப்பிட்டார்.

" இன்றும், எதிர்காலத் தலைமுறையினருக்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உணவின் சக்தியைத் திறக்கும்" தன் நோக்கத்தால் உந்தப்பட்டு நெஸ்லே, சிறுவயது முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பானங்கள் மூலம் இலங்கை குடும்பங்களின் தலைமுறைகளுக்கு ஊட்டமளித்துள்ளது .

1906ம் ஆண்டில் இலங்கையில் தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த நெஸ்லே இன்று இலங்கையர்களின் வாழ்வில் ஒருங்கிணைந்த அங்கமாக மாறியுள்ளது. இந்நிறுவனம் இலங்கையில் சந்தைப்படுத்தப்படும் தன் உற்பத்திகளின் 90% க்கும் அதிகமானவற்றை குருநாகலில் உள்ள அவர்களின் அதிநவீன தொழிற்சாலையில் கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கிறது.


**Contact:**

| | | | |
|---|---|---|---|
| Corp. Public Affairs | Damitha Kulatunga | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| Corp. Communications | Isuri Alahakoon | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |